



வெளியீடு : தமிழம் அறக்கட்டளை, சூளேசுவரன்பட்டி

# மொட்டு வகுப்பு



தாய்த்தமிழ் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி,
சூளேசுவரன்பட்டி, பொள்ளாச்சி - 642 006 (2007-08)

## இது ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல பெற்றோர்களுக்கும் தான்......

மொட்டு வகுப்பு என்பது மூன்று அகவையுடைய மழலையினருக்கான வகுப்பு ஆகும். இந்த அகவையினர் எப்படி இயங்குகிறார்கள் ? எதை விரும்புகிறார்கள் ? எந்தச் சூழலை ஏற்றுக் கொள்கிறார்கள் ? என்று நுணுகிக் கண்டால்தான் அவர்களது இயல்புக்கு ஏற்றவாறு சரியான சூழலை அமைத்துக் கொடுக்க முடியும். எனவே முதற்கட்டமாக அவர்களை நுணுகிக் காணும் வழிகளைக் காண்போம்.

எப்படி இயங்குகிறார்கள் ?

1. உடல் இயக்கம். நடக்கிறார்கள். ஓடுகிறார்கள். ஆடுகிறார்கள். குதிக்கிறார்கள். தாண்டுகிறார்கள். மேலே ஏறுகிறார்கள்... இப்படிப் பல இயக்கங்கள். இயல்பாகக் காணப் படுகிற இந்த இயக்கங்கள் மழலைகளிடம் காணப்படாமல் அவர்கள் சோம்பியிருந்தால் அதற்கான காரணங்களைக் கண்டறிந்து, குறைநீக்கி, ஊக்கப்படுத்தி, வழிகாட்டி உடல் இயக்கத்தை ஒழுங்குபடுத்த வேண்டும்.
2. மன இயக்கம். சிரிக்கிறார்கள், பேசுகிறார்கள், கொஞ்சுகிறார்கள், சினப்படுகிறார்கள், அடம்பிடிக்கிறார்கள், பிறரை அடிக்கிறார்கள்..உளத்தியலின் வெளிப்பாடுகளான இந்த மனவெழுச்சிகள் ஒடுக்கப்பட்டு இருந்தால் அல்லது மாற்றப்பட்டு இருந்தால், அதற்கான காரணங்களைக் கண்டறிந்து பதிவுசெÖது கொள்ளவேண்டும்.
3. தனியாக இருக்கும் போதும் நண்பர்களோடு குழுவாக இருக்கும்போதும் எப்படிச் செயல்படுகிறார்கள் என்று கண்டறிந்து பதிவுசெÖது கொள்ளவேண்டும்.

எதை விரும்புகிறார்கள் ?


1. எப்படிப்பட்ட பொருள்களை விரும்புகிறார்கள் ? என உற்று நோக்க வேண்டும். எடுத்துக்காட்டாக பெரிய பொருள்கள், வண்ணப்பொருள்கள், அழகான பொருள்கள்,
2. எந்த வகையான உணவை அதிலும் எந்தச் சுவையுடைய உணவை மிகுதியாக விரும்புகின்றனர் எனக் கண்டறிய வேண்டும்.
3. எந்த வகையான உடை அணிய விரும்புகின்றனர் எனவும், எந்த வண்ணத்தில் உடை அணிய விரும்புகின்றனர் எனவும் அவர்களோடு பேசிக் கண்டறிய வேண்டும். - இப்படிப் பொதுவாகக் கண்டறிகிற இவை, இந்த வகுப்பு மழலைகளைச் சிறப்பாக அணுகுவதற்கான வழி முறைக்கு உதவுவதாக இருக்கும்.

எப்படி அணுகுவது ?

1. அடிக்காமல், அச்சுறுத்தாமல், திட்டாமல், அன்பாக அணுகுதல் வேண்டும்.
2. இயல்பான போக்கில் இயங்கவிட்டு தரமானவற்றை முறைபடுத்தி வழிகாட்டவேண்டும்.
3. இது சரியில்லை, அது சரியில்லை எனக் குறைகூறாது சிறப்பாகச் செÖகிற ஒவ்வொரு செயலையும் ஊக்கப்படுத்தி, தேவைப்பட்டால் பெருமை படுத்தி வளர்க்க வேண்டும்.
4. மகிழ்வூட்டுகிற, விளையாட்டு வழியிலான அணுகுதலோடு புரிகிற வகையில் விளக்குதல் வேண்டும்.

**மழலைச் செல்வங்கள் ஆற்றலோடு வளர நாம் வழிஅமைப்போம்....**





மாணவர் தன் குறிப்புப் படிவம், (வகுப்பு ஆசிரியர் நிரப்பவும்)

பெயர் :
வகுப்பு :
பிறந்த நாள் :

உயரம் : செ.மீ
எடை : கிலோ

தாÖமொழி :
தாயின் பெயர் :
பணி :

தந்தையின் பெயர் :
பணி :
உடன்பிறந்தவர்கள் :

வீட்டு முகவரி :

பாட உருவாக்கம்: ம. நடேசன்.,க.மு.,அறி.மு.,கல்வி.மு.,தொ.தூ.க.,
ஓவியர் : வெள்ளியங்கிரி,. துறையூர்
உதவி: த.முத்துலெட்சுமி., ர.ராசேசுவரி., செ.செல்வி., சா. சமீனா பானு

## மாணவர்கள் தன் சோதனைப் படிவம் - நடிப்பு

மாணவர்கள் பயிற்சியைச் செய்து முடித்ததும் கட்டத்திற்குள் √ செய்யவும்

☐ மாணவர்களிடம் அன்பாகப்பேசி, வினாக்கள் கேட்டு, இயல்பாகப் பேசவைத்தல்.

☐ அவர்கள் பார்த்த உறவினர், பொருள்கள் பற்றிப் பேசவைத்தல். அவர்களுக்குத் தெரிந்த விலங்குகள் போல ஒலி எழுப்பச் செய்தல். அவை போல நடிக்க வைத்தல்.

☐ இயல்பாகப் பேசி அவர்களுக்குத் தெரிந்த ஒலியை எழுப்பச்செய்தல். அவர்களுக்கு விருப்பமான விலங்குகள் போல நடக்கச் செய்தல். அந்த விலங்குகள் போல ஒலி எழுப்பச் செய்தல்.

☐ தவளை போலத் தத்தித் தத்தித் தாவுதல்

☐ வாத்து போல அசைந்து அசைந்து நடத்தல்

☐ யாணை போலக் கையை ஆட்டி ஆட்டி நடத்தல்

☐ குரங்கு போலக் குதித்துக் குதித்து ஓடுதல்

☐ பேருந்து ஓட்டநராக நடித்தல்

☐ பேருந்து நடத்துநராக நடித்தல்

☐ தொடர்வண்டி ஓட்டுவது போல நடித்தல்,

☐ காய்கறி வணிகராக நடித்தல்

☐ பாடத்திலுள்ள கதைகளை நடிக்க வைத்தல்








அன்பிற்குரிய பெற்றோர்களுக்கு,

வணக்கம். மூன்று அகவையுடைய மழலைகளுக்கான பாடநூல் இது. உளவியல் அடிப்படையில் பல்வேறு ஆற்றல்களை வளர்த்தெடுக்கும் வகையில் அமைக்கப்பட்ட பாடத்திட்டத்தின் தொடரிதான் இந்தப் பாடநூல், இந்தப் பாடநூலில் மாணவர்கள் பாடிப்பழகுவதற்கான பாடல்களும், எழுதிப் பழகுவதற்கான படிநிலைகளும் தரப்பட்டுள்ளன.

மாணவர்களது உள்ளார்ந்த ஆற்றலை கண்டறிந்து, துணிச்சலும், தெளிவும், நுட்பமும் உடைய மாணவர்களை உருவாக்க இந்தப் படிநிலை உதவும். மாணவர்களிடம் புதைந்து கிடக்கிற ஆற்றல்களைக் கண்டறிந்து, முறைபடுத்தி, அறிவையும் ஆற்றலையும் வளர்த்தெடுத்து அவர்களது எதிர்கால நடைமுறைச் செயற்பாடுகளுக்கு வழிஅமைப்பதுதான் கல்வியின் நோக்கம் என்று கல்வி வல்லுநர்கள் கண்டறிந்துள்ளார்கள்,

இந்தப் பாடநூல் தமிழ், கணக்கு, சூழலியல் என்கிற பொதுவான பாடங்களோடு, தாய்த் தமிழ்த் தொடக்கப் பள்ளிகளுக்கே உரிய உயரிய அணுகுமுறைகளான ஊக்கப்பாடல்கள், தெளிதமிழ்ச் சொற்கள், கைவேலை, புலப்பயிற்சி, விளையாட்டு, கதைகூறல், நடிப்பு, கலை பண்பாடு, கையெழுத்துப் பயிற்சி என்கிற அணுகுமுறைகளை உள்ளடக்கியதாக உள்ளது. ஆசிரியர் கையேட்டின் தொடர்ச்சியாக மாணவருக்கான இந்தப் பாடநூலானது வெளியிடப்படுகிறது,


மொட்டு வகுப்பிற்கான பாடத்திட்டத்தை உருவாக்க ஒத்துழைத்த தமிழகத்தின் பாவலர்கள், தாய்த்தமிழ்ப் பள்ளி ஆசிரியர்கள். மாணவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்களின் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்

அன்புடன்,

ம. நடேசன்., முதுநிலை விரிவுரையாளர்
பேச: (04259) 221278 - 98420 02957
**www.thamizham.net - pollachinasan@gmail.com**

வரைந்து பழகுக

## நேர் கோட்டுப் படங்கள்



## வளை கோட்டுப் படங்கள்







கண், காது, மூக்கு, வாய், மெய் ஆகிய ஐந்து புலன்களும் அறிவின் நுழைவாயில்கள் ஆகும். மாணவர்களின் புலன்கள் சரியாக, இயல்பாக இயங்கவேண்டும். மொட்டு வகுப்பில் சரியாகத் திட்டமிட்டு ஐம்புலன்களுக்கும் பயிற்சி தந்தால் அது அவர்களது எதிர்கால அறிவு நுட்பத்திற்கு அடித்தளமாக இருக்கும். எனவே இப்பகுதியில் தனிக்கவனம் செலுத்தவும்.

- ☐ வண்ணங்கள் அறிதல் (நீலம், மஞ்சள், சிவப்பு)
- ☐ ஒரே வண்ணப் பொருள்களை இணைசேர்த்தல்.
- ☐ பொருள்களை உற்றுநோக்குதல், அடையாளம் காணுதல் (கல், மணல், தாள்)
- ☐ பொருள்களைப் பற்றிக் கூறுதல்
- ☐ பொருள்களைப் பிரித்து எடுத்தல், வகைப்படுத்துதல் (வண்ண மணிகள், விதைகள், காசுகள் போன்றவற்றைக் கலந்து கொடுத்து அவற்றை பிரித்து எடுத்து வகைப்படுத்த ஊக்குவித்தல், வழிநடத்துதல்)
- ☐ கம்பியில் வண்ண மணிகளைக் கோர்த்தல்
- ☐ நூலில் வண்ண மணிகளைக் கோர்த்தல்
- ☐ ஏதேனும் மூன்று (வெள்ளை, பச்சை, மஞ்சள்) வண்ண மணிகளைக் கலந்து கொடுத்து, அவைகளைத் தனித் தனி வண்ணங்களாகப் பிரித்து, கொடுக்கப்பட்ட நூலில் ஒன்றன் மேல் ஒன்றாகக் கோர்க்க வைத்தல்.


- ☐ கேட்டல். பல்வேறு ஒலிகளை எழுப்பச் செய்தல் பல்வேறு ஒலிகளை அடையாளம் காணுதல் தீப்பெட்டியில் மணிகளைப் போட்டு ஆட்டிப்பார்த்து உள்ள மணிகளின் எண்ணிக்கை அறிய வைத்தல்
- ☐ சுவைத்தல். இனிப்பு, புளிப்பு, கசப்பு என்ற மூன்று சுவைகளைச் சுவைக்கச் செய்து வேறுபாடு அறிய வைத்தல்
- ☐ நுகர்தல். ஊதுவர்த்தி, சந்தனம், பூண்டு முதலியவற்றை நுகர்ந்து அறியச்செய்தல்.
- ☐ தொடு உணர்வு. வழவழப்பு சொரசொரப்பு இரண்டிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டினை கண்களை மூடிக்கொண்டு தடவிப்பார்த்து உணரவும், அடையாளம் காணவும் பயிற்சி அளித்தல்

மாணவர்கள் பயிற்சியைச் செய்து முடித்ததும் கட்டத்திற்குள் ☑ செய்யவும்

மாணவர்கள் தன் சோதனைப் படிவம் - **விளையாட்டு**

மாணவர்கள் விளையாட்டை விளையாடி முடித்ததும் கட்டத்திற்குள் ☑ செய்யவும்



- ☐ நேர் கோட்டில் நடத்தல். உட்காருதல்
- ☐ எளிய உடற்பயிற்சி.
- ☐ ஓடுதல், கரணம் அடித்தல், தொட்டு விளையாடுதல்.
- ☐ கயிற்றை நேராக வைத்து அதன் மீது நடத்தல்.
- ☐ சமநிலைப்பலகை. நடக்கவைத்தல்.
- ☐ கயிற்று ஏணி வழியாக ஏறுதல்.
- ☐ ஊஞ்சல் விளையாட்டு
- ☐ கயிற்றைப் பிடித்துக்கொண்டு தொங்குதல்.
- ☐ வாத்து போல நடத்தல்
- ☐ தவளை போலத் தாண்டுதல்
- ☐ பந்து விளையாட்டு. பந்தை உருட்டுதல்
- ☐ பந்தை எறிதல், பந்தை இலக்கு நோக்கி எறிதல்
- ☐ பந்தைப் பின் பக்கம் வீசுதல்
- ☐ ஒருவர் பந்தை வீச மற்றொருவர் பந்தைப் பிடித்தல்.
- ☐ டயர் மீது சறுக்குதல். டயரைக் கட்டி அதில் ஊஞ்சல் ஆடுதல்
- ☐ கண்ணைத் துணியால் கட்டிக் கொண்டு பிடிக்கிற விளையாட்டு
- ☐ தலை, கண், கை, கால் இயக்கத்திற்கான எளிய உடற்பயிற்சி
- ☐ வணக்கம் விளையாட்டு





## படம் பார்த்துப் பெயர் சொல்











## படம் பார்த்துப் பெயர் சொல்








மாணவர்கள் கைவேலைத் திறனைச் செய்து முடித்ததும் கட்டத்திற்குள் √ செய்யவும்

- ☐ ஆற்று மணலில் வீடுகட்டுதல், விரும்புகிற உருவங்கள் செய்தல்
- ☐ வண்ணத்தாளைக் கிழித்து, தாளில் பசை தடவி ஒட்டுதல்.
- ☐ துண்டுக் கட்டைகளைக் கொடுத்து வீடுகட்டுதல்.
- ☐ காய்கறிகளைக் குறுக்காக வெட்டி வண்ணத்தில் தோய்த்து அச்சடித்தல்.
- ☐ வண்ணக் கயிற்றில் சடை பின்னுதல்.
- ☐ தாள் துணிகளைச் சரியாக மடிக்கப் பயிற்றுவித்தல்.
- ☐ அமுக்கு பொத்தான், சட்டைப் பொத்தான் போடப் பயிற்சி தருதல்
- ☐ கொக்கி மாட்டப் பயிற்சி தருதல்.
- ☐ தாளில் விசிறி, கப்பல் செய்யப் பயிற்சி தருதல்.
- ☐ கயிற்றில் முடிபோடப் பயிற்சி தருதல்.
- ☐ விரும்புகிற படங்களை வரைதல்.
- ☐ வரைந்த படத்திற்கு வண்ணம் கொடுக்க வைத்தல்
- ☐ வரைந்த படத்தின் மீது கல் அடுக்குதல்
- ☐ வரைந்த படத்தின் மீது புளியங்கொட்டை அடுக்குதல்
- ☐ மருந்தில்லாத தீக்குச்சிகளைக் கொடுத்து உருவங்கள் ஆக்குதல்.



# தெளிதமிழ்ச் சொற்கள்

**வகுப்பறைச் சூழல்**

| | |
|---|---|
| எழுது பலகையை எடு | (சிலேட்) |
| கரும்பலகையில் எழுது | (black board) |
| பலப்பம் கொடு | |
| கரிக்குச்சியைச் சீவு | (pencil) |
| அளவுகோல் பிடி | (scale) |
| தூவலால் எழுது | (pen) |
| குவளையில் குடி | (tumbler) |
| உணவுக் கலனை மூடு | (tiffen box) |
| நாற்காலியில் உட்கார் | (chair) |
| மேசையின் மீது ஏறு | (மேஜை) (table) |
| சுண்ணக்கட்டியால் வரை | (chalk piece) |
| கடிகாரத்தைப் பார் | (watch) |
| சீருடை அணிந்து வா | (uniform) |
| குறிப்பேடு கொண்டு வா | (note book) |
| மையால் நிரப்பு | (Ink) |
| நீர்க்குடுவையை எடுத்துவா | (water cane) |

**வீட்டுச் சூழல்**


| | |
|---|---|
| திறவுகோல் எங்கே ? | (சாவி) |
| மின் விசிறியைப் போடு | (fan) |
| குழல் விளக்கு எரிகிறதா ? | (tube light) |
| தேநீர் சுவையில்லை | (tea) |
| வானொலியைக் கேள் | (radio) |
| தொலைபேசியில் பேசு | (telephone) |
| தொலைக்காட்சிப்பெட்டி எங்குள்ளது? | (television box) |
| நாளை பள்ளி விடுமுறை | (leave) |
| பணப்பையில் போடு | (money purse) |
| சோறு பிசை | (rice, சாதம்) |
| புலவு மணம் இனிமையானது | (பிரியாணி) |
| முகமா பூசு | (face powder) |
| இருக்கையில் உட்கார் | (chair) |
| பலகணியைத் திற | (ஜன்னல்) |

**பொது இடங்களில்**


| | |
|---|---|
| சாலையில் இடப்புறம் செல் | (road) (left) |
| பூங்கா குளிர்ச்சி தரும் | (park) |
| பெட்டிக் கடை திறந்துள்ளதா ? | (petti shop) |
| பேருந்து எங்கு போகிறது ? | (bus) |
| தொடர்வண்டி பார்த்திருக்கிறாயா ? | (train) |



வண்ணம் தீட்டுக



## வண்ணம் தீட்டுக





## மதிப்புறவுச் சொற்கள்.

¿øÄ ¦º¡ü¸¨Ç ¿õ ÁÆ¨ÄÂ÷¸û §Àºð Î õ.
¿øÄ ¦ºÂüÀ¡ Î ¸Ç¡ø ¿õ ÁÆ¨ÄÂ÷¸û §Á¦ÄÆð Î õ.
¿øÄ ÀÆì¸ í ¸¨Ç ¿õ ÁÆ¨Ä¸ Ù ì Ì ¿¡õ ¦º¡øÄ¢ò ¾Õ§Å¡õ

Å½ì¸õ - «öÂ¡ Å½ì¸õ, «õÁ¡ Å½ì¸õ, «ôÀ¡ Å½ì¸õ, «ì¸¡ Å½ì¸õ, ¾õÀ¢ Å½ì¸õ, ¾í¨¸ Å½ì¸õ, «¨ÉÅÕìÌõ Å½ì¸õ.

Å¡í¸ - «öÂ¡ Å¡í¸, «ôÀ¡ Å¡í¸, «õÁ¡ Å¡í¸, « ñ½¡ Å¡í¸ ¾õÀ¢ Å¡í¸, ¾í¨¸ Å¡í¸, «¨ÉÅÕõ Å¡í¸, Å½ì¸õ Å¡í¸.

¿ýÈ¢ - «öÂ¡ ¿ýÈ¢, «ôÀ¡ ¿ýÈ¢, «õÁ¡ ¿ýÈ¢, «ì¸¡ ¿ýÈ¢, « ñ½¡ ¿ýÈ¢, ¾õÀ¢ ¿ýÈ¢, ¾í¨¸ ¿ýÈ¢, «¨ÉÅÕìÌõ ¿ýÈ¢

¾¡Õí¸û (¾¡í¸) - ÀÄôÀõ ¾¡í¸, ±ØÐÀÄ¨¸ ¾¡í¸, ¨¸ ¾¡í¸, ÌÅ¨Ç ¾¡í¸, Òò¾¸õ ¾¡í¸

±Îí¸û (±Îí¸)- ¨À ±Îí¸, ¸¡¢ì§¸¡ø ±Îí¸, ¨¸òÐ½¢ ±Îí¸, ¸ø ±Îí¸, Ìîº¢ ±Îí¸ «ð¨¼ ±Îí¸, Ð½¢ ±Îí¸, þÕì¨¸ ±Îí¸, ÌÈ¢ô§ÀÎ ±Îí¸

Å¡Õí¸û (Å¡í¸) - º¡ôÀ¢¼ Å¡í¸, ÌÇ¢ì¸ Å¡í¸, Å¢¨ÇÂ¡¼ Å¡í¸, ±Ø¾ Å¡í¸, ÀÊì¸ Å¡í¸. Åð¼ò¾¢üÌ û Å¡í¸, ¿¼óÐ Å¡í¸, ¿¢Á¢÷óÐ Å¡í¸, µÊ Å¡í¸, ¾ ñ½£÷ ÌÊí¸, ¾ ñ½£÷ º üÚí¸. ÅÌôÀ¨È Üð Îí¸, À¡¼õ ÀÊí¸, §º¡Ú º¡ôÀ¢Îí¸, Åð¼Á¡ö ¿¢øÖí¸, Åð¼ò¾¢üÌ û §À¡í¸, Å¡¢¨ºÂ¡ö ¿¢øÖí¸, Á½¢ «Êí¸, º¢Ú¿£÷ §À¡í¸. Á¢ýÅ¢º¢È¢ §À¡Îí¸, À¡ðÎ §¸Ùí¸, ¬ð¼õ ¬Îí¸, º¢Õ¨¼ §À¡Îí¸. Á¢¾¢ÂÊ ±Îí¸, ¦À¡ò¾¡ý §À¡Îí¸, ÌÅ¨Ç¨Â ¦¸¡Îí¸, §Áø º𨼠§À¡Îí¸. À¡Å¡¨¼ ¸ðÎí¸, ¸¡ø º𨼠§À¡Îí¸, ¦¾¡¨Äì¸¡ðº¢À¡Õí¸, Å¡¦É¡Ä¢ §¸Ùí¸. ¸Æ¢ôÀ¨È §À¡í¸, Å¢Çì¨¸ §À¡Îí¸, ¾ ñ½£Ã¡ø ¸Ø×í¸, ¨¸¨Âì ¸Ø×í¸, º¢ó¾¡Áø º¡ôÀ¢Îí¸, Ìô¨À¨Â §À¡¼¡¾¢í¸, Ìô¨À¨Â ±Îí¸, Å¢ðÎìÌ §À¡í¸, º¡ôÀ¢ð¼ Àí¸, ¨¸¿¸õ ¦Åðí¸, ±ñ ¦½ö¾¼×í¸,

¿ýÈ¢ Á£ñ Îõ ºó¾¢ô§À¡õ,
¿ýÈ¢ Á£ñ Îõ ¿¡¨Ç ºó¾¢ô§À¡õ.

கணிதம் கழித்தல்

3 - 2 = ☐

4 - 2 = ☐

5 - 3 = ☐

7 - 2 = ☐

6 - 2 = ☐

7 - 5 = ☐

9 - 8 = ☐

5 - 4 = ☐

5 - 5 = ☐


6 - 1 = ☐

2 - 2 = ☐

5 - 2 = ☐



வண்ணம் தீட்டுக




## பாடிப் பழகுக




தமிழே வணக்கம்
தாயே வணக்கம்
அமிழ்தே வணக்கம்
அருள்வாய் எனக்கும்




பள்ளி செல்லப் போகிறேன்
பாடம் படிக்கப் போகிறேன்
படித்து எழுதி நானுமே
பாரில் உயரப் போகிறேன்



பாப்பா பாப்பா கைவீசு
பைந்தமிழ் படிக்கக் கைவீசு
ஒற்றுமை ஓங்கக் கைவீசு
உண்மை பேசக் கைவீசு,

தட்டு தட்டு கைதட்டு
தம்பி பாப்பா கைதட்டு
மொட்டு கையை நீ தட்டு
முத்தம் தருவேன் கைதட்டு





## கணிதம் கூட்டல்

| | |
|---|---|
| $2 + 2 = \square$ | $1 + 2 = \square$ |
| $5 + 3 = \square$ | $4 + 2 = \square$ |
| $6 + 2 = \square$ | $7 + 2 = \square$ |
| $1 + 8 = \square$ | $5 + 4 = \square$ |
| $2 + 5 = \square$ | $3 + 6 = \square$ |
| $2 + 2 = \square$ | $2 + 6 = \square$ |

நினைவில் நிறுத்துக

1 2 3 4 5

6 7 8 9 10

11 12 13 14 15

16 17 18 19 20

---

10 20 30 40 50


60 70 80 90 100

5 10 15 20 25 30 35 40 45 50

55 60 65 70 75 80 85 90 95 100



வரைந்து பழகுக, வண்ணம் தீட்டுக



ஒலித்துப் பழகுக

ட , ப , ம , ய , ர , ழ

ட் , ப் , ம் , ö , ர் , ழ்

டா , பா , மா , யா , ரா , ழா

எழுதிப் பழகுக

ட , ப , ம

ய , ர , ழ

1 2 3 4 5

6 7 8 9 10



கணக்கு. உயரம், குட்டை





கணக்கு. ஒன்று, பல





கணக்கு, எத்தனை உள்ளன எண்ணி எழுதுக





பாடிப் பழகுக




பட்டாம்பூச்சி பறக்குது பார்
பள்ளிக்கூடம் திறக்குது பார்
விட்ட பாடம் தொடங்குது பார்
விடுமுறை எல்லாம் கழிந்தது பார்



சிட்டுக்குருவி இங்கே பார்
சிறகை விரிக்கும் அழகைப் பார்
பட்டுப் போன்ற மேனியை
படபடக்கும் அழகைப் பார்,

பெரிய யானை வந்தது
சிறிய கண்ணால் பார்த்தது
அகன்ற காதை ஆட்டியே
அசைந்து அசைந்து நடந்தது,






அம்மா அம்மா தமிழம்மா
அமிழ்தம் உன்றன் மொழியம்மா
அன்புப் பிள்ளை நானம்மா
அருள்வாய் எனக்கும் நீயம்மா,

1




பாடிப் பழகுக

கதிரவன் எழுவான் கிழக்கு
கடமை முடித்தால் மேற்கு
இதுவே இயற்கை வழக்கு
இதுபோல் உன்னைப் பழக்கு,






கிளியே கிளியே கிளியக்கா
கிளையில் தாவுது குரங்கக்கா
கிளியும் சொல்லுது அக்கக்கா
கிள்ளை மொழியோ இனிதக்கா



அம்மா சொல்லும் மாடு
அன்னை நிலமே நாடு
சும்மா இருந்தால் கேடு
தூய தமிழில் பாடு,

ஓடி வந்து நில்லு
ஒன்றிரண்டு சொல்லு
ஏடெடுத்துக் கல்லு
என்றும் பள்ளி செல்லு,






எழுதிப் பழகுக

க ச ட த ப ற

ய ர ல வ ழ ள

ஞ ங ண ந ம ன

அ ஆ இ ஈ

உ ஊ எ ஏ ஐ

ஒ ஓ ஔ ஃ

பாடிப் பழகுக



ஊஞ்சல் ஆட ஆசையா
உடனே இங்கே ஓடிவா
பாடிப் பாடி ஆடலாம்
பறந்து பறந்து ஆடலாம்.

பள்ளிக்கூடம் செல்லலாம்
பாடம் நன்றாய்ப் படிக்கலாம்
எண்ணும் எழுத்தும் கற்கலாம்
ஏற்றமாக வாழலாம்.

ஒன்று இரண்டு மூன்று
உண்மை அன்பை வேண்டு
நான்கு ஐந்து ஆறு
நல்ல சொல்லைக் கூறு
ஏழு எட்டு ஒன்பது
எண்கள் சரியாய் எண்ணிடு
பத்து பத்து பத்து
படிக்கும் அறிவே சொத்து,




ஒலித்துப் பழகுக

1 2 3 4 5

6 7 8 9 10





முத்தமிழ் மொட்டே சாய்ந்தாடு
முத்த மழையே சாய்ந்தாடு
முத்தின் ஒளியே சாய்ந்தாடு
தித்திக்கும் தேனே சாய்ந்தாடு,






அம்மா நல்ல அம்மா
ஆசையுள்ள அம்மா
என்னை விட்டு அம்மா
இருக்க மாட்டாங்க சும்மா.

திங்கள் செவ்வாய் அறிவன்
வியாழன் வெள்ளி காரி
ஞாயி றோடு ஏழு
நாட்கள் ஒரு கிழமை,

3




பாடிப் பழகுக

பள்ளி செல்ல விரும்பு
பாடம் வெல்லக் கரும்பு
படித்து விட்டுத் திரும்பு
பண்ண வேண்டாம் குறும்பு





குட்டி முயல் ஓடுது
குதித்துக் குதித்து ஓடுது
தொட்டுப் பிடிக்க ஓடினேன்
தாவிக் குதித்து ஓடுது.



குவாக் குவாக் வாத்து
குட்டைக் காலு வாத்து
குதித்து ஓடும் வாத்து
குளத்தில் நீந்தும் வாத்து,

மழையே மழையே வா வா
மண்ணை ஈரம் ஆக்க வா
மழலைப் பாப்பா மகிழவே
மழையே மழையே வா வா.







பாடிப் பழகுக

கசட தபற வல்லினமாம்
யரல வழள மெல்லினமாம்
ஞஙண நமன இடையினமாம்
தமிழால் நாமும் ஓர் இனமாம்

ஒலித்துப் பழகுக

க ச ட த ப ற
ய ர ல வ ழ ள
ஞ ங ண ந ம ன

பாடிப் பழகுக

அழாமல் இருக்கணும் சின்னப் பாப்பா அ…அ…அ…
ஆடிப் பாடனும் சின்னப் பாப்பா ஆ……ஆ……
இலையில் சோறு போட்டிட வேண்டும் இ…இ…இ…
ஈ யை நீயும் ஓட்டிட வேண்டும் ஈ……ஈ……
உண்மையாகப் பேசிட வேண்டும் உ …உ …உ …
ஊஞ்சல் ஆடி மகிழ்ந்திடுவாö நீ ஊ……ஊ……
எண்ணிப் பார்த்து எதையும் செ-யணும் எ…எ…எ…
ஏற்றத் தாழ்வு பார்க்காதே ஏ……ஏ……
ஐயம் நீங்கக் கற்றிட வேண்டும் ஐ……ஐ…….
ஒற்றுமையாக இருந்திட வேண்டும் ஒ…ஒ…ஒ…ஒ…
ஓடியாடி உடலை வளர்ப்பாö ஓ……ஓ……
ஔவை சொல்லை மறவாதே நீ ஔ…ஔ…

பாடிப் பழகுக





எங்கள் வீடு தமிழ் வீடு
எங்கள் நாடு தமிழ் நாடு
எங்கும் எதிலும் தமிழ் பேசும்
எங்கள் மக்கள் தமிழ் மக்கள்.



காக்கா பாரு பாப்பா
கருப்பு நிறம் பாப்பா
காக்கா மனசோ வெளுப்பு
கற்றுக் கொள்ளு படிப்பு

தமிழே எங்கள் மொழியாகும்
தாயைப் போன்ற துணையாகும்
என்றும் வாழ்வில் கற்றிடுவோம்
ஏற்றம் பெற்றே வாழ்ந்திடுவோம்.



சதுரமான இருக்கை பார்
சாய்ந்து அமர உதவுமே
வட்டமான தட்டிலே
வகை வகையாய் உண்ணலாம்
கரும்பலகை செவ்வகம்
கணக்குப்போட உதவுமே
சதுரம் வட்டம் செவ்வகம்
கணக்குப் பாட உருவமே.




பாடிப் பழகுக



அன்பாய் நானும் இருப்பேனே
ஆசையாகப் படிப்பேனே
இனிய சொற்கள் சொல்வேனே
ஈவிரக்கம் கொள்வேனே
உழைத்தே நானும் பிழைப்பேனே
ஊர்தியில் மெதுவாய்ச் செல்வேனே
என்றும் தமிழைப் படிப்பேனே
ஏற்றத்தாழ்வினை மறப்பேனே
ஐ.நா.சபைக்கும் செல்வேனே
ஒற்றுமையாக வாழ்வேனே
ஓடும் நதிகளை இணைப்பேனே
ஔவையாரை மதிப்பேனே
அஃறினை உயிர்களை
மதிப்பேனே.



அம்மா என்னைப் பாரம்மா
அன்புப் பிள்ளை நானம்மா
அழகாய்ப் பாடுவேனம்மா
அனைத்தும் தமிழ் தானம்மா.



பாடிப் பழகுக

சின்னஞ் சிறிய பொம்மை
சிரிக்கும் அழகு பொம்மை
கண்ணைக் கவரும் பொம்மை
காசு கேட்கா பொம்மை,





கொடியில் பூத்த பூக்கள்
கொள்ளை அழகுப் பூக்கள்
செல்வி தலையில் பூக்கள்
சிரிக்கும் முல்லைப் பூக்கள்.


அமுதம் எங்கே சொல்லம்மா
அழகுத் தமிழின் சொல்லம்மா
நமது கண்கள் மொழியம்மா
நன்மை காட்டும் வழியம்மா.






இடி இடிக்குது டப டப
மழை பொழியது பட பட
மரம் முறியுது மட மட
முரசு அடிக்குது டம டம

6










பாடிப் பழகுக


கம்பைப் போல முருங்கைக் காö
கல்லைப் போல பறங்கிக் காö
பாம்பைப் போல புடலங்காö
பானை போல பூசுணைக்காö
விரல்கள் போல வெண்டைக்காö
விதையே இல்லா வாழைக்காö.





குயிலைப் போல பாடவா
மயிலைப் போல ஆடவா
மானைப் போல ஓடவா
சேர்ந்து விளையாடவா.

அம்மா என்பது மூன்றெழுத்து
அப்பா என்பதும் மூன்றெழுத்து
அக்கா என்பதும் மூன்றெழுத்து
தங்கை என்பதும் மூன்றெழுத்து
மாமன் என்பதும் மூன்றெழுத்து
அத்தை என்பதும் மூன்றெழுத்து
உறவுச் சொற்கள் பெரும்பாலும்
நமது தமிழில் மூன்றெழுத்து.



பாடிப் பழகுக

பச்சைக் கிளி பேசுது கீ…கீ…கீ..
குயில் ஒன்று கூவுது கூ…கூ…கூ..
ஆடு என்னை அழைக்குது மே…மே…மே..
நாயும் பாÖந்து குரைக்குது லொள்…லொள்…லொள்..







பஞ்சு மிட்டாÖ இனிப்பு
பாகற் காயோ கசப்பு
கடல் நீரோ உவர்ப்பு
களிப் பாக்கு துவர்ப்பு
வடுமாங்காÖ புளிப்பு
வற மிளகாÖ கார்ப்பு
ஆறு சுவையும் சுவைப்போம்
ஆடிப்பாடி மகிழ்வோம்.

வேப்ப மரம் வேல மரம்
அரச மரம் ஆல மரம்
பனை மரம் தென்னை மரம்
புளிய மரம் மா மரம்
மரங்கள் நாமும் வளர்ப்போம்
மகிழ்வுடனே சிரிப்போம்.



10












பாடிப் பழகுக



எறும்புக் கூட்டம் போலவே
இணைந்து வாழப் பழகுவோம்
கூடி வாழும் வாழ்விலே
கோடி கோடி நன்மையே.



குட்டி நாயும் குரைக்குது
குட்டை வாலை ஆட்டுது
எட்டி எட்டி பாயுது
எங்கும் ஓடி வருகுது.




மயிலே மயிலே நீ ஆடு
வண்ணத் தோகை விரித்தாடு
ஒயிலாÖ ஒரு கால் எடுத்தாடு
ஓடும் முகிலைக் கண்டாடு.




காலையில் எழுந்ததும் குளித்திடுவேன்
கல்விக்கூடம் சென்றிடுவேன்
தாÖமொழிக் கல்வி கற்றிடுவேன்
தமிழால் நானும் உயர்ந்திடுவேன்.

7



பாடிப் பழகுக



கருப்பு யாணை பெரியது
கட்டெரும்போ சிறியது
இமயமலை பெரியது
இந்தக் கல் சிறியது.





எனக்குக் கைகள் இரண்டு
எனக்குக் கால்கள் இரண்டு
எனக்குக் கண்கள் இரண்டு
எனக்குக் காதுகள் இரண்டு
மூக்கு மட்டும் ஒன்று
வாயும் கூட ஒன்று.





எங்கள் வீடு பாருங்கள்
எளிய வீடு பாருங்கள்
சுற்றும் முற்றும் பாருங்கள்
சற்று நின்று பாருங்கள்
எங்கும் குப்பை இல்லையே
ஈயும்  கொசுவும் இல்லையே.








பாடிப் பழகுக

அணிலே அணிலே ஓடிவா
அழகு அணிலே ஓடிவா
கொய்யா மரம் ஏறிவா
குண்டுப் பழம் கொண்டு வா
பாதிப் பழம் உன்னிடம்
பாதிப் பழம் என்னிடம்
கூடிக் கூடி இருவரும்
கொறித்துக் கொறித்துத் தின்னலாம்.





மியாவ் மியாவ் பூனைக்குட்டி
மீசையுள்ள பூனைக்குட்டி
வவ் வவ் நாய்குட்டி
வாலை ஆட்டும் நாய்குட்டி
மே மே ஆட்டுக்குட்டி
மேயப் போகும் ஆட்டுக்குட்டி
பாப்பா பாப்பா படுசுட்டி
பாட்டுப் பாடலாம் கைதட்டி

